259

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி க. ரக்தாக்ஷி ௵ புரட்டாசிமீ பகுதி கூ.
Vol. 1. September & October No. 9.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

(196-ம் பக்கத் தொடர்ச்சி.)

கீழ் பத்த முக்த, நித்யர்களாகச் சொல்லப்பட்ட மூன்று வகை ஆத்மஸ்வரூபமும் ஆனந்தமாயும் ஆனந்தத்துக்கு ஆசிரயமாயுமிருக்கும். ஆனந்தமாவது அநுகூலமென்றறிகை. அங்ஙனன்றிக்கே தனக்குத்தானே யனுகூலமாயிருப்பதும் ஆனந்தமென்று வ்யவஹரிக்கப்படும். இங்கு அநுகூலமாகையாவது வேறொன்றைப் பெறுகைக்கு ஸாதனமாக விரும்பப்படுவதன்றிக்கே தானே விரும்பப்படுமதாயிருக்கை. ஆத்மா கீழ் நிரூபித்தபடி அநுகூலமாயிருக்கும். அனுகூலமாயிருக்கும்வஸ்துக்களையும் அனுகூலங்களென் றறியுமதாயிருக்கும். இப்படி சுருதி முதலான ப்ரமாணங்களால் ஆத்மஸ்வரூபம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இங்ஙனன்றிக்கே, உறங்கினவன் உணர்ந்தபிறகு நான் ஸுகமாக உறங்கினேன் என்று தான் அநுஸந்திப்பதாலும், ஆத்மா ஆனந்தரூபனுயிருப்பது ப்ரத்யக்ஷ ஸித்தமாயறியப்படும். அதெப்படியென்றால், உறங்குகிறகாலத்தில் வேறு அறிவு ஒன்றுமில்லாமல் தன்னுடைய ஸ்வரூபம் மட்டும் துலக்கமாகத தனக்குத்தானே விளங்கிக்கொண்டிருக்கும்போது அநுகூலமாகத் தோற்றிக்கொண்டிருந்தமையால் விழித்தபிறகு அந்தஸ்மரண பூர்வகமாயுள்ள ப்ரத்ய பிஜ்ஞாப்ரத்தியக்ஷ முண்டாகிறது. உறக்கமாவது:-ஆத்மா பிறிதொன்றையும் அறியாதிருப்பதாகையால், அவ்வறியாமை அபாவரூபமாகிறது. நம்முடைய ஸித்தாந்தத்தில் அபாவம் தனக்கு ஆசிரயமாயுள்ள ஸ்வரூபமேதவிர வேறுபதார்த்தமன்றென்று ஸித்தித்திருப்பதால் அந்த உறக்கமும் ஆத்மஸ்வரூபமேயாம். அந்த

ஆத்மஸ்வரூபத்தை, ஸுகமாக உறங்கினேன் என்று ப்ரத்யபிஜ்ஞாப்ரத்யக்ஷம் விஷயீகரித்திருப்பதால் ஆத்மா ஸுகரூபம் என்று ஏற்படுகிறது. எங்ஙனமெனில்? இனிதாகப் பாடினேன், மெதுவாக நடந்தேன் என்கிற ப்ரத்யபிஜ்ஞாப்ரத்யக்ஷத்தில் இனிமை பாட்டிலும், மெதுவாயிருக்கை நடையிலும் அந்வயிப்பதுபோலே ஸுகமாகத் தூங்கினேன் என்கிற ப்ரத்யபிஜ்ஞாப்ரத்யக்ஷத்தில் ஸுகமாயிருக்கை தூக்கத்தில் அந்வயிக்கிறது. இதனால், கீழ் நிரூபித்தபடி அந்த ஸுகாகாரமான தூக்கமானது தனக்கு ஆசிரயமாயுள்ள ஆத்மாவின் ஸ்வரூபமாக ஏற்படுகிறபடியால் ஆத்மா ஆனந்தரூபமென்று சித்திக்கிறது. ஒவ்வொருவரும் நன்றாயுறங்குகிற சமயத்தில், பிறர் எழுப்பும்போது உறக்கத்தில் விருப்பமும், எழுப்புவதில் வெறுப்பு முண்டாகக் காண்கையால் உறக்கத்தில் ஆத்மா, சுகரூபமாகத் தனக்குத்தானே தோற்றிக்கொண்டிருக்கிறதென்பது சகலர்க்கும் ஸ்வாநுபவஸித்தமாயும் அறியத்தக்கதே.

இனி அசித்தினுடைய ஸ்வரூபம் நிரூபிக்கப்படும். அசித்தாவது-அறிவில்லாததாயும், எப்போதும் பரிணமமுள்ளதாயும், ஈசுவரனுக்கு சரீரமாயும் இருக்கும். அது ப்ரக்ருதி என்றும், சுத்தஸத்வமென்றும், காலமென்றும் மூன்று வகைப்படும்.

அவற்றுள், ப்ரக்ருதியாவது.-ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களுக்கும் ஆசிரயமாயும், சேதனனுடைய கர்மானுகுணமான பகவத் ஸங்கல்பத்தாலே எப்போதும் பரிணமத்தையுடைத்தாயிருக்கும். இது, ப்ரகிருதியென்றும், அவிபக்த தமஸ்ஸு என்றும், விபக்த தமஸ்ஸு என்றும், அக்ஷரம் என்றும், அவ்யக்தம் என்றும் சில அவஸ்தைகளை யுடைத்தாயிருக்கும்.

அவற்றுள், அவிபக்த தமஸ்ஸாவது- மஹாப்ரளயதெசையில் ஈசுவரனுடைய ஸ்வரூபத்தில் ஏகீபவித்து, தனித்து வ்யவஹரிக்க யோக்யதை யில்லாமலிருக்கும்; விபக்ததமஸ்ஸாவது- தனித்து வ்யவஹரிக்கப்படுமதாயிருக்கும்; அக்ஷரமாவது- அக்ஷரன் என்று பெயரையுடைய ஜீவஸமஷ்டி கெர்ப்பமாயிருந்து கார்யோன்முகமாயிருக்கும்; அவ்யக்தமாவது கார்யத்தை யுண்டாக்கக் கடவதாயிருக்கும்.

இப்படியிருந்துள்ள அவ்யக்தத்தில் நின்றும் மஹான் என்கிற தத்வமுண்டாகும்; அதில்நின்றும் அஹங்காரம் உண்டாகும்; அது

ஸாத்விகமென்றும், ராஜஸமென்றும், தாமஸமென்றும் மூன்று வகையாயிருக்கும். ஸாத்விகாஹங்காரத்தில் நின்றும் த்வக், ஜிஹ்வா, க்ராண, சக்ஷு, ச்ரோத்ரங்களாகிற ஜ்ஞானேந்த்ரியங்கள் ஐந்தும், வாக், பாணி, பாத, பாயூபஸ்தங்களாகிற கர்மேந்த்ரியங்களைந்தும், மனஸ்ஸும் உண்டாகும். இவற்றுள் ஜ்ஞானேந்திரியங்கள் அறிவுக்குரிய ஸாதநங்களாம். கர்மேந்த்ரியங்கள் அறிவுடைய கார்யமான க்ரியைகளுக்கு ஸாதநங்களாம். மனஸ்ஸு அவ்விருவகையிந்த்ரியங்களுக்கும் ஸஹகாரியாயிருக்கும். தாமஸாஹங்காரத்தில் நின்றும் பூதங்களுடைய ஸூக்ஷ்மாவஸ்தைகளாயுள்ள தந்மாத்ரங்களும், ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், பிருதிவீ என்கிற பஞ்ச பூதங்களும் அடைவேயுண்டாகும்.

இப்படியிருந்துள்ள ஐந்து பூதங்களும், அஹங்காரம் மஹான் இவைகளேழும் தனித்தனி கார்யம் செய்யமுடியாமையால் பகவத் ஸங்கல்பத்தாலே (1) ஸப்தீக்ருதங்களாய்க்கொண்டு கார்யங்களையுண்டாக்கும்.

ஸப்தீகரணமாவது இவைகளில் ஒவ்வொன்றையும் இரண்டுபாகமாக்கி ஒரோன்றின் ஒவ்வொரு பங்கை அவ்வாறு பாகமாக்கி மற்றுள்ள ஆறோடும் கூட்டிக் கார்யோந்முகமாக்குகை. இப்படி ஸப்தீக்ருதங்களான இவைகளேழும் கூடி அண்டத்தை யுண்டாக்கும்.

சுருதியில் த்ருவ்ருத்கரணமே சொல்லியிருந்தபோதிலும், அந்த த்ருவ்ருத்கரணம், பஞ்சீகரணம், ஸப்தீகரணம் இவைகளுக்கும் உபலக்ஷணம். இந்த விஷயத்தை ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில், "மஹதாத்யா விசேஷாந்தா ஹ்யண்ட முத்பாதயந்திதே" என்று நிரூபிக்கப்பட்டது,

அண்டமாவது கீழேழுலோகங்களும் மேலேழுலோகங்களும் அடங்கியதாய், கீழ்ச்சொன்ன ஐந்து பூதங்களாலும் மஹதஹங்காரங்களாலும் ஆக்கப்பட்டதாய், ஒன்றோடொன்று பதின்மடங்கு விஸ்தாரமுள்ள ஆவரணங்களோடே கூடினதாயிருக்கும். இப்படியே அநேக அண்டங்கள் ஏற்பட்டிருக்கும். இதற்கு ப்ரமாணங்கள் (2) "அண்டாநாந்து ஸஹஸ்ராணி கோடிகோடி சதாநிச" என்றற் றொடக்கத்தனவாம்.

---

(1) இதன் அர்த்தம். மஹத்தத்வ முதலாக பஞ்சபூதங்கள் முடிவாக ஏழுங்கூடி அண்டத்தை யுண்டாக்கும் என்பதாம்.

(2) இதன் அர்த்தம் அண்டங்கள் அளவிறந்தன என்பதாம்.

இப்படியிருந்துள்ள அண்டங்களில் ஒவ்வொரு அண்டத்திலும் ப்ருஹ்மா முதலான தேவதைகளும், மனுஷ்யாதி ஜங்மங்களும் மற்றுமுள்ள பதார்த்தங்களும் அடங்கியிருக்கும். இந்த விஷயத்தை ஸ்ரீ பாகவதத்தில் ப்ருஹ்மஸ்துதியில் (3) "க்வாஹம் தமோ மஹதஹம் கசராக்நிவார்பூ ஸம்வேஷ்டிதாண்ட கடஸப்தவிதஸ்திகாய: க்வேத்ருக்விதா தகணிதாண்ட பரார்த்தசர்யா பாதாத்வ ரோம விவரஸ்யச தேமஹித்வம்'' என்று ப்ருஹ்மா நிரூபித்திருக்கிறார். இவ்வளவோடு ப்ரகிருதிதத்வம் நிரூபிக்கப்பட்டது.

இனி சுத்தஸத்வம் நிரூபிக்கப்படும்.— சுத்தஸத்வமாவது ரஜஸ் தமஸ்ஸுக்கள் கலவாத கேவல ஸத்வகுணத்துக்கு ஆசிரயமாகவிருக்கும். இந்த சுத்தஸத்வம் ப்ரக்ருதிக்குமேல், 'ததநந்தம்' என்றும் சொல்லுகிறபடியே ப்ரக்ருதியைக் காட்டிலும் மும்மடங்கு அதிகமாயிருக்கும்; அன்றியும் முக்தர்க்கும், நித்யர்க்கும், ஈசுவரனுக்கும் தர்மபூத ஜ்ஞாநம்போலே தானே ப்ரகாசிக்கும்படியாயிருக்கும். இன்னும் ஈசுவரனுடைய இச்சையாலே அவனுக்கு போகார்த்தமாக விமான மண்டப கோபுராதிகளாய்க் கொண்டு பரிணமிக்கக் கடவதாயும், நித்யவிபூதி என்றும், அயோத்தி என்றும், அபராஜிதை என்றும் பெயர்களை யுடையதாயுமிருக்கும்,

இப்படியிருந்துள்ள நித்யவிபூதியில் ஆமோதம் முதலான வ்யூஹஸ்தானங்களும், மற்றும் நித்தயர்களுடைய லோகங்களும் எண்ணிறந்தனவாயிருக்கும். இந்த விஷயம் கௌஷீதகீ முதலான உபநிஷத்துக்களிலும் பாஞ்சராத்ர இதிஹாஸ புராணாதிகளிலும் ஸ்பஷ்டமாக விளங்கும். அவையெல்லாம் இங்கு விரித்துரைப்பில் மிகப் பெருகுமென் றஞ்சி விடப்பட்டன.

இனி, காலமாவது ஸத்வம், ரஜஸ், தமஸ் இந்த மூன்று குணங்களும் இல்லாததாயும் சேதனனுடைய கர்மாநுகுணமான பகவத் ஸங்கல்பத்தாலே க்ஷண லவ காஷ்டாதி ரூபமாகப் பரிணமிக்கக் கடவதாயிருக்கும். இப்படிப்பட்ட கால பரிணாமம் நித்யவிபூதியில் இல்லை.

---

(3) இதன் அர்த்தம். ப்ரக்ருதி மஹத் அஹங்காரம் ஆகாச முதலான பூதங்கள் இவைகளால் சூழப்பட்ட அண்டமாகிற குடத்துக்குள்ளே எழுசாண் சரீரத்தையுடைய நான் எவ்வளவு? இப்படிப்பட்ட அநேகாண்டங்கள் தொங்குகிற ரோம கூபங்களையுடைய உம்முடைய மஹிமை எவ்வளவு? என்று (ப்ருஹ்மா ஸ்துதித்தபடி.);

இனி ஈசுவர தத்வம் நிரூபிக்கப்படும்.—ஈசுவரனுவான்.— ஸமஸ்தகல்யாண குணகரனுயும், ஸமஸ்த வஸ்துக்களுக்கும் சேஷியாயும் ஸ்வாமியாயும் ஸர்வ கர்ம ஸமாராத்யனுயும் நிரதிசய புருஷார்த்தமான மோக்ஷத்தைக் கொடுப்பவனுயும், உபாயமாயும், உபேயமாயுமுள்ள மேலான தேவதை. அந்த மேலான தேவதை ஸ்ரீமானுன நாராயணனே யென்பது சுருதி ஸ்ம்ருதி இதிஹாஸ பாஞ்சராத்ர புராணுதிகளாலும் மற்றும் ப்ரதாநர்களாயுள்ள ஸம்ஸ்கிருத த்ராவிட மஹாகவிகளின் வாக்யங்களாலும் மற்றும் உபபத்திகளாலும் நிரூபிக்கலாகும்.

சுருதியில், 'காரணந் துத்யேய:' என்ற வாக்யத்தால் ஜகத்காரண வஸ்துவே தியானிக்கத் தக்கதென்று அறுதியிட்டு, அந்த ஜகத்காரணம் "யதோவாஇமாநிபூதாநி" என்று தொடங்கி 'ப்ருஹ்ம' சப்த வாச்யமாம் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

"ஏகோவை நாராயண ஆஸீத்" என்ற வாக்கியத்தால் ப்ருஹ்ம ருத்ராதிகளுண்டாவதற்கு முன்னே ஜகத்காரணமாயிருந்த ப்ருஹ்ம சப்தவாச்யன் நாராயணன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும், "ஏநாக்ஷரம் புருஷம் வேதஸத்யம் ப்ரோவாசதாம் தத்வதோ ப்ருஹ்மவித்யாம்" என்பதால், எந்த ஜ்ஞானத்தாலே அக்ஷரனுன புருஷனே அறிவனே அந்தப்ருஹ்ம வித்யையைச் சொல்லக்கடவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனல் ப்ருஹ்ம சப்தவாச்யன் புருஷன் என்று பெறப்படுகிறது.

ஆனந்தவல்லியில் "ஆத்மந ஆகாச: ஸம்பூத:" என்று தொடங்கி, ஆத்மாவே ஜகத்காரண பூதனென்றும், அந்த ஆத்மா ஆனந்தமயனென்றும், அந்த ஆனந்தமயனை பரமாத்மா "ய: சாஸாவாதித்யே" என்று ஆதித்யமண்டலாந்தர்வர்த்தியென்றும் சொல்லப்பட்டது.

சாந்தோக்யத்தில் அந்தராதித்ய வித்யையில் "ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருச்யதே தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் அக்ஷிணீ" என்பதனல் ஆதித்ய மண்டலாந்தர்வர்த்தி "புருஷன்" என்றும் அவன் "புண்டரீகாக்ஷன்" என்றும் சொல்லியிருக்கிறது. இந்த புண்டரீகாக்ஷனுன புருஷன் நாராயணன் என்

பது நிரூபிக்கப்படும். சைவபுராணத்தில், நாராயணன் தினந்தோறும் ஆயிரம் தாமரை மலர்களாலே சிவனை அர்ச்சித்து வந்ததாகவும் ஒருநாள் பக்தி சோதிக்கவேண்டி ஒரு தாமரைமலரை சிவன் காணமற் செய்ததாகவும், அப்போது அர்ச்சிக்கும் நாராயணன் புண்டரீகாக்ஷனுகையால் தன்னுடைய கண்மலரா லர்ச்சித்ததாகவும், அதனுல் ஸந்துஷ்டனுய் சக்ரம் கொடுத்ததாகவும் சொல்லியிருப்பதால் புண்டரீகாக்ஷன் நாராயணன் என்பது பரபக்ஷத்தாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது,

இன்னும், ஆதுனிகர்களான சைவகவிகளில் ஒருவர் சிவஸ்துதியில் "கஞ்சலோசந பூஜ்யாய கஸ்மை சிந்மஹஸே நம:" என்று நாராயணனை புண்டரீகாக்ஷனுகச் சொல்லியிருக்கிறுர்.

தமிழருள் பொது நோக்குடையரான திருவள்ளுவரும், தாம் செய்த திருக்குறள் என்னும் நூலினுள்ளே, "தாம் வீழ்வார் மென்ரேட்டுயிலினினிதுகொல் தாமரைக்கண்ணனுலகு" என்பதால் நிரதிசயானந்த போகப்ரதமான மோக்ஷலோகத்தை புண்டரீகாக்ஷனுடையதென்று சொல்லியிருக்கிறுர். கல்வியிற்பெரிய கம்ப நாடரும், "தயரதன் மதலையென்பார் தாமரைக்கண்ணனென்பார்" என்பதால் வெளியிட்டிருக்கிறுர்.

புருஷஸூக்தம் நாராயணபரமென்பது ஸ்பஷ்டம்; போதாயநஸ்ம்ருதியில் புருஷஸூக்தத்தை விஷ்ணு பூஜையில் உபயோகிக்க வேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த புருஷஸூக்தத்தில் "ஸஹஸ்ரசிர்ஷாபுருஷ:" என்று தொடங்கி "தமேவம் விதித்வா அதிம்ருத்யுமேதி" என்பதனுல் அந்த புருஷனுடைய ஜ்ஞாநமே மோக்ஷத்துக்கு ஸாதனமென்றும் "நாராயண பரம்ப்ருஹ்ம" என்பதனுல் அந்த புருஷன் நாராயணன் என்றும், 'தஸ்யா: சிகாயாமத்யே' என்கிற வாக்யத்தால் தஹரவித்யைக்கு நாராயணன் உபாஸ்யன் என்றும் சொல்லியிருப்பதால் மற்ற ப்ருஹ்மவித்யைகளுக்கும் நாராயணனே உபாஸ்யனென்று வித்தித்திருக்கிறது.

கீதையில், "புருஷஸ்ஸபரம: பார்த்தபக்த்யா லப்யஸ் த்வநந்யயா" என்பதனுல் புருஷ சப்தவாச்யன் நாராயணனென்று சொல்லப்பட்டது. காளிதாஸ மஹாகவியும், "ஸ்ரீவத்ஸ லக்ஷ்மாபுருஷ:ச ஸாக்ஷாத்" என்பதாகக் குமாரஸம்பவத்தில் சொல்லியிருக்கிறுர். இப்

படியே புருஷசப்தம் நாராயணபரம் என்பதற்கு அநேக ப்ரமாணங்கள் காட்டத்தகும்; அவையெல்லாமிங்கே காட்டினுல் மிக விரியுமென்று விடப்பட்டன.

இப்படியே ஸுபாலோபநிஷத்திலும், மஹோபநிஷத்திலும், கடவல்லி முதலான உபநிஷத்துக்களிலும் நாராயணனே பரதத்வமென்பது வ்யக்தம்.

இனி ஸ்ம்ருதி விஷயம் நிரூபிக்கலாகும். "யதைவ கிஞ்ச மநுரவதத் தத்பேஷஜம்" என்று சுருதியாலே ஆப்ததமராகச் சொல்லப்பட்ட வைவ: சுவதமநு தன்னுடைய ஸ்ம்ருதியில், ஆதியில், "ஆஸீதிதம்தமோபூதம்" என்று தொடங்கி, "ஆபோநாரா இதிப்ரோக்தா: ஆபோவை நரஸூநவ: தாய தஸ்யாயநம்ப்ரோக்தம் தேந நாராயண ஸ்ம்ருத:" என்பதனுல், ஜலமானது நரனென் ஈசுவரனிடத்தில்நின்றும் உண்டானதாகையாலே நாரம் என்று சொல்லப்படும்; அந்த நாரத்தை ஸ்தானமாக உடையவனுகையாலே நாராயணனென்று சொல்லப்படுவன் என்றும், "லோஹித்யாய சரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷு: விவிதா: ப்ரஜா: மஹாபூதாதி வ்ருத்தௌஜா: ப்ராதுராஸீத் தமோநுத:" என்பதனுல், தான் ஸங்கல்ப்பித்து தன்னுடைய சரீரமாயுள்ள ப்ரக்ருதியைக்கொண்டு நாநாவிதங்களான ப்ரஜைகளை சிருஷ்டிக்கவேணுமென்கிற இச்சையுடையவனுய், மஹா பூதங்களுக்கெல்லாம் ஆதியான அஹங்கார தத்வத்தில் வ்யாபித்த ஸங்கல்பத்தை யுடையவனுய், ப்ரக்ருதியினுடைய தமஸ்த்வாவஸ்தையைப் போக்குகிறவனுய்க்கொண்டு கார்யோன்முகனுக ஆனுன், என்று சொல்லியிருப்பதால், நாராயணனே பரதத்வமென்றும், அவனே சேதநாசேதனசரீரியாய்க்கொண்டு, சிருஷ்டிப்பதால் விசிஷ்டாத்வைதமே ஸித்தாந்தமென்று ஏற்படுகிறது. இந்த ஸ்ம்ருதிக்கு வ்யாக்யாதாவான குல்லூகபட்டர் அத்வைதியாயிருந்தபோதிலும், இந்த சுலோக வ்யாக்யானுவஸரத்தில், "அநேந க்ருந்தகாரேண த்ருதண்டி வேதாந்திமதமேவ ஆத்ருதம்பவதி" என்ற வாக்கியத்தால், இந்த க்ருந்தகாரரான மநுவாலே த்ருதண்டி வேதாந்தி மதமான விசிஷ்டாத்வைதமே ஆதரிக்கப்பட்டதென்று சொல்லியிருக்கிறுர்.

இப்படியே யாக்ஞவல்க்யஸ்ம்ருதி, சாண்டில்யஸ்ம்ருதி முதலானவைகளில், நாராயணனே பரதத்வமென்றும், அவனே

மோக்ஷப்ரதனென்றும், அவனையே பக்தி ப்ரபத்திகளால் உபாஸிக்க வேணுமென்றும், அப்படி உபாஸிக்குமவர்கள் பஞ்சகால பராயணர்களா யிருக்கவேணுமென்றும் சொல்லி, அந்த பஞ்சகாலங்களுடைய ஸ்வரூபத்தையும் நிரூபித்திருக்கிறது. இந்த விஷயம் ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்படும்.

இனி, இதிஹாஸங்களில் ப்ரதானமான ராமாயணத்தில், 'அதிகம் மேநிரே விஷ்ணும் தேவாஸ் ஸர்ஷிகணாஸ் ததா'' என்பதனால், ருத்ரனுக்கும் விஷ்ணுவுக்கும் நடந்த யுத்தத்தில் ருத்ரனுடைய பராஜயத்தைக் கண்ட தேவர்களும் ரிஷிகணங்களும் விஷ்ணுவை அதிகனாக நினைத்தார்களென்றும், அயோத்யா காண்டத்தில், "அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:'' என்பதனால், தேவதைகளாலே ராவண வதத்துக்காக ப்ரார்த்திக்கப்பட்ட விஷ்ணுவானவர் சக்ரவர்த்தி திருமகனாக அவதரித்தார் என்றும், "ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத்'' என்பதனால் அப்படிப்பட்ட சக்ரவர்த்தி திருமகனுக்கு நாராயணனே ஆராத்யனென்றும், ஆரண்யகாண்டத்தில், கரவதானந்தரம் அகம்பநோக்தியில் நாராயணனே ராமனாக அவதரித்தானென்பதை ஸூசித்திருப்பதாலும், கிஷ்கிந்தா காண்டத்தில், "நிவாஸ வ்ருக்ஷஸ் ஸாதூநாம்,'' "த்வம ப்ரம்மய:ச'' என்கிற சுலோகங்களாலும், ஸுந்தரகாண்டத்தில், "ப்ருஹ்மாஸவயம்பூ'' என்கிற சுலோகத்தாலும், பகவத்பாரம்யம் சொல்லப்பட்டிருக்கிறது. யுத்தகாண்டத்தில், ராவணவதாநந்தரம், "தமஸ: பரமோ தாதா சங்கசக்ர கதாதர:'' என்று மண்டோதரி வார்த்தைகளாலும், "பகவான் நாராயணோ தேவ:'' என்பது முதலான ப்ருஹ்மாவினுடைய வாக்யங்களாலும், உத்தரகாண்டத்தில் மாலி ஸுமாலி மால்யவான் இவர்களுடைய யுத்தத்தில், அவர்கள் ஏவிய பாணங்கள் விஷ்ணுவினிடத்தில் லயமடைந்ததைப்பற்றிச் சொல்லும்போது, அந்த விஷ்ணுவினிடத்தில் ப்ரளயகாலத்தில் ப்ரஜைகள் லயமடைந்ததுபோல என்று த்ருஷ்டாந்தங் காட்டியிருப்பதாலும், காலபுருஷன் ப்ருஹ்மாவாலே நியமிக்கப்பட்டவனாய்க்கொண்டு சக்ரவர்த்தி திருமகனைத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளவேணுமென்று பிரார்த்திக்கிறகாலத்தில் "நாப்யாமுத்பாத்யமாமபி'' "ப்ராஜாபத்யம்த்வயாகர்மமயிஸர்வம் நிவேசிதம், என்பதனால், தேவரீருடைய திருநாபீகமலத்தில் என்னையுண்டாக்கி, ப்ராஜாபத்யமாகிற வ்யாபாரம் என்னிடத்தில் தேவரீரால் வைக்கப்பட்டதென்று ப்ருஹ்மாவின் வார்த்தையாகச் சொல்லப்பட்டிருப்பதாலும் நாராயணனே பரதத்வமென்பது ஸ்பஷ்டம். (தொடரும்)

ஸ்ரீ உபய வேதாந்த வித்வான்,
சிங்கராசார்யர்; காரப்பங்காடு.

ஸ்ரீ:

ஈசுவர கர்த்ருத்வம்.

ஈசுவர கர்த்ருத்வமாவது-எல்லா , வஸ்துக்களையுமுடையவனாகிய ஸர்வேசுவரனிடத்திலுள்ள கர்த்தாவாயிருக்கும் தன்மையாம். கர்த்தாவாயிருக்கையாவது-புத்தியோடுகூடின இச்சை முயற்சிகளை யுடையவனாயிருத்தலாம். ஈசுவரனை ஒழிந்த எல்லா வஸ்துக்களும் உளவாதலும், நிலைபெறுதலும், அவைகளின் பிரவர்த்தி நிவர்த்திகளும் ஈசுவராதீனமாயிருக்கின்றன. ஆகவே ஸர்வேசுவரன் நியந்தாவாயிருந்து எல்லாக் காரியங்களையும் நடத்துகிறான் என்பது பெறப்படும். இவ்விஷயத்தை ஆழ்வாரும்,

''நாமவனிவனுவனவளிவளுவளெவள்
தாமவரிவருவரதுவிதுவுதுவெது
வீமவையிவையுவையவைநலந்தீங்கவை
ஆமவையாயவையாய்நின்றவவரே.'' என்றும்,

''அவரவர்தமதமதறிவறிவகைவகை
அவரவரிறையவரெனவடியடைவர்கள்
அவரவரிறையவர்குறைவிலரிறையவர்
அவரவர்விதிவழியடையநின்றனரே.'' என்றும்,

''நின்றனரிருந்தனர்கிடந்தனர் திரிந்தனர்
நின்றிலரிருந்திலர்கிடந்திலர் திரிந்திலர்
என்றுமோரியல்பினரெனநினைவரியவர்
என்றுமோரியல்வொடுநின்றவெந்திடரே.''

என்றும் அருளிச்செய்தார். இவற்றின் திரண்ட பொருள்களாவன.-ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்களாயும், போற்றத் தக்க வஸ்துக்களாயும், அழியும்பொருள்களாயும், நன்மையுடையவையாயும், அஃதில்லாதவையாயும், இறப்பெதிர்வு நிகழ்காலங்களையுடையவையாயு மிருக்கின்ற சேதனாசேதனங்களின் ஸத்தையெல்லாம் ஈசுவராதீனமா யிருக்கின்றனவென்றும், உலகில் காணப்படுகிற எல்லாத் தேவதைகளும் தம்மை யடைந்தவர்களுக்குப் பலன்களைக் கொடுப்பதற்கு ஸர்வேசுவரன் அத் தேவதைகளுக்கு அந்தர்யாமியாய் நிற்கின்றானென்றும், சேதனங்களின் நிற்றல், இருத்தல், கிடத்தல், திரிதல், நில்லாமை, இருக்காமை, கிடவாமை, திரியாமைகளாகிய பிரவர்த்தி நிவர்த்திகளும் ஈசுவராதீனமா யிருக்கின்றனவென்றுமாம்.

பிருஹ்ம ருத்ரேந்திராதிகள் முறையே சிருஷ்டி ஸம்ஹார திரிலோக பாலகர்களென்று சொல்லப்பட்டிருப்பதால் பிருஹ்மேந்திராதிகளும் கர்த்தாக்களாயிருக்கின்றார்களென்பது பெறப்படுகிறதே யெனின்? ஸர்வேசுவரன் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை பிருஹ்மேந்திராதிகள் வாயிலாகத்தானே செய்கிறான். பிருஹ்மேந்திராதிகள் கரணங்களாவார்கள். ஆகவே பிருஹ்மேந்திராதிகள் அமுக்ய கர்த்தாக்களென்பதும், ஸர்வேசுவரன் முக்ய கர்த்தாவென்பதும் பெறப்படும். அரசன் கோயிலைக் கட்டினானென்றால், ஏவுதற்கர்த்தா அரசனாகவும், இயற்றுதற் கர்த்தா தச்சனாகவுமிருப்பதுபோல இங்கு இயற்றுதற் கர்த்தா பிருஹ்மேந்திராதிகளெனக் கொள்க. இயற்றுதற் கர்த்தா ஏவுவான் சொற்படி நடப்பவனாதலால்; அமுக்யனென்று சொல்லப்பட்டது. ஆக ஸர்வாதிக கர்த்தா ஈசுவரனென்று அறியத்தக்கது.

இதைச் செய் இதை விடு என்று சாஸ்திரங்களிற்கூறிய விதிவிலக்குகளுக்கு உடன்பட்டுச் சேதனர்கள் ஸ்வதந்தரமாகக் கார்யங்களைச் செய்வதும், ஒழிவதுமாயிருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோமன்றோ? ஆதலால், சேதனர்களுக்கும் கர்த்ருத்வம் உண்டென்று தோற்றுகிறதே யெனின்? மேலே பிருஹ்மேந்திராதிகளுக்கும் கர்த்ருத்வம் இல்லையென்று விலக்கியபோது சேதனர்களுக்குக் கர்த்ருத்வம் இல்லையென்பது சொல்லாமலே பெறப்படும். நிற்க, இவர்களுக்கும் கர்த்ருத்வம் இல்லையென்பதைக் கீழ்க் குறிப்பிடும் திருஷ்டாந்தத்தால் அறிக. சேதனன் ஸுஷுப்தி அவஸ்தையோடுகூடின காலத்தில் அறிவற்றவனாயிருக்கின்றான்; பின் துயில்நீங்கி எழுந்திருக்குங் காலத்தில், புத்தியோடுகூடின இச்சை முயற்சிக ளில்லாதவனாய் எழுந்திருக்கின்றான்; இதனால் சேதனனுக்கு அந்தராத்மாவாயிருந்து ஸர்வேசுவரன் ஏவ அதனால் உணர்வுற்று எழுகின்றானென்று விளங்குகிறதன்றோ! ஆக பிருஹ்மேந்திராதிகளோடு சேதனர்களோடு வாசியற ஸர்வேசுவரன் எல்லோருக்குங் கர்த்தாவாயிருந்து எல்லாக் கார்யங்களையும் நடத்துகிறான். இக்கருத்துப்பற்றியே ஆழ்வாரும்,

"அவனேயகன்ஞாலம்படைத்திடந்தான்
அவனேயஃதுண்டுமிழ்ந்தானளந்தான்
அவனேயவனுமவனுமவனும்
அவனேமற்றெல்லாமுமறிந்தனமே"

என்று பிருஹ்மேந்திராதிகளுக்கு அந்தராத்மாவாயிருந்து எல்லாக் காரியங்களையும் ஸர்வேசுவரனே செய்கிருனென்று அருளிச் செய்தார்.

இக் கருத்துக்களெல்லாம் பொதிந்த ஓர் பழமொழியும் இங்கு அறியத்தக்கது. அது பண்டைக்காலந்தொட்டு ஸர்வ ஸாதாரணமாக வழங்கப்பட்டு வருவதொன்றும். அது வருமாறு-"அவனசையாமல் அணுவுமசையாது" என்பதாம். இதன் பொருளை ஆராய்வோம். இங்கு அவன் என்பது மேற்காட்டிய பாசுரத்தின்படித் தத் சப்தபரியாயமாய் ஸர்வேசுவரனை யுணர்த்தத் தக்கதாம். அன்றிக்கே விஷ்ணுவாசகமான அகாரமே அன் என்னும் விகுதி பெற்ற வழி, இறை என்பது இறைவன் என்ருவதுபோல அ என்பதும் அன் பெற்று அவன் என விஷ்ணுவாசகமாம். அன்றியும் அவன் என்பதைப் பண்டறிசுட்டாகக் கொண்டு பிரஸித்தி யுடையவனெனப் பொருள்கொள்ளினும் பொருந்தும். பிரஸித்தி யுடையவன் ஸர்வ வியாபகனும், நன்கு மதிக்கப்படுமவனுமா யிருப்பானுதலால்; விஷ்ணுவென்பது பெறப்படும். "அவன் அசையாமல் அணுவும்" அசையாதெனவே அவன் அசைதலால் அணுவும் அசைகிறதெனப் பொருள் கொள்ளக்கிடக்கிறது. அங்ஙனங்கொள்ளின்,

"பரந்ததண்பரவையுள்நீர்தொறும்பரந்துளன்
பரந்தவண்டமிதெனநிலவிசும்பொழிவற
கரந்தசில்லிடந்தொறுமிடந்திகழ்பொருடொறுங்
கரந்தெங்கும்பரந்துளனிவையுண்டகரனே"

என்றபடி ஒன்றொழியாது எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறம்புமாய் நின்று வ்யாபித்திருக்கிற முழுமுதற் பொருளிற்கு அசைவு கூடாததலால் பொருந்தாதென்க. பின்னை எவ்வாறு பொருள் கொள்வதெனின்? அசை என்பது அசைதல் அசைத்தல் என்ற தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவான பகுதியாதலால் யோக்கியதானுகுணமாகத் 'தலையை அசை' என்பதுபோல செயப்படு பொருள் குன்ருத வினையாகப் பொருள் கொள்ளவேண்டும். கொள்ளவே அவன் இயக்காமல் அணுவும் இயங்காதென்பதும், அவன் இயக்கில் அண்டமும் அசையும் என்பதும் போதரும்.

தன்வினை பிறவினைகள் உருகினன், உருக்கினன் என்றும், வாடினன் வாட்டினன் என்றும் மெலிந்தான் மெலித்தான் என்றும்,

அசைந்தான் அசைத்தான் என்றும் வெளுத்தான் என்றும் பல வகையாகவரும். இங்கு வல்லொற்றிரட்டிப் பிறவினை யாதலும், மெல்லொற்று வல்லொற்றுய்ப் பிறவினை யாதலும், மாறுபடாது தன் வினைச்சொல்லே பிறவினைச்சொல்லாதலுமாய்க் காணப்படு கின்றன. வல்லொற் றிரட்டிப் பிறவினையாய் வருஞ்சொற்கள், தன் வினைக்குரிய பகுதிகளை ஏற்காதும், ஏற்றும் நிற்கும். மெல் லொற்று வல்லொற்றுய் வரும் பிறவினைச்சொற்கள் பெரும்பாலும் தன்வினைக்குரிய பகுதிகளையே ஏற்றுநிற்கும். பகுதி யொன்றுய் வரும் தன்வினை பிறவினைச்சொற்கள் எதிர்மறை வினை ஏற்கும் போது மெல்லொற்று வல்லொற்றுய்த் திரிந்தேனும், இயல்பாக வேனும் வரும். "சிற்றில் சிதையேல்" என்ற எதிர்மறை வினை யில் இயல்பாய் வந்தது காண்க. அதுபோல இங்கு "அவனசை யாமல்" என்பதிலுள்ள எதிர்மறை பிறவினைச் சொல்லாகவும், 'அணுவும் அசையாது' என்பதிலுள்ள எதிர்மறைவினை தன்வினை யாகவும் கொள்க.

ஸர்வேசுவரன் விஷ்ணுவாகாரத்தால் ஸர்வசரீரியா யிருக் கின்றுனுதலால் அணுமுதல் அண்டகோடி பர்யந்தமுள்ள சரா சரங்களெல்லாம் அவன் இயக்க இயங்குமென்பதாம். எவ்வா றெனின்? சரீரியான ஜீவனுடைய இச்சா மாத்திரத்தால் தன் சரீ ரத்திலுள்ள கைகால் முதலிய அவயவங்கள் இயங்குகின்றனபோல ஸர்வசரீரியான ஸர்வேசுவரன் இச்சா மாத்திரத்தால் இயங்கு மென்பதாம்.

இத்துணையுங் கூறியவாற்றல் ஸர்வேசுவரனே எல்லாவற் றிற்கும் கர்த்தாவா யிருக்கிறுனென்பதும், சேதனு சேதனங்கள் உளவாதலும், நிலைபெறுதலும், அவற்றின் ப்ரவர்த்தி நிவர்த்தி களும் ஈசுவராதீனமா யிருக்கின்றனவென்பதும், ஸர்வேசுவரன் பிருஹ்மேந்திராதிகளைக் கரணமாகக்கொண்டு சிருஷ்டிஸ்திதி ஸம் ஹாரகங்களைச் செய்கின்றுனென்பதும், பிருஹ்மேந்திராதிகள் இயற் றுதற் கர்த்தாக்க ளாவார்களென்பதும், சேதனர்கட்கும் கர்த்ருத் வம் இல்லை என்பதும், இக் கருத்தெல்லாமமைந்த "அவனசை யாமல் அணுவுமசையாது" என்ற பழமொழியின் பொருளின்ன தென்பதும், ஸர்வேசுவரன் விஷ்ணுவாகாரத்தாலிருந்து எல்லா வஸ்துக்களையும் இயக்குகிறுனென்பதும் உரைக்கப்பட்டன.

ப. — அ.

ஸ்ரீ:

கோவர்த்தனமெடுத்த விருத்தாந்தம்.

இவ் விருத்தாந்தத்தில் முக்யமாயுணர்ந்துகொள்ளத்தக்க விஷயமிருக்கின்றமையால் இங்கு அதை ஆராய்ந்துரைக்கப்படும்.

உலகம் மழை வளத்தால் செழிப்புற்று வாழ்வதற்கு இந்திரவிழாச் செய்வது தொன்றுதொட்டுள்ள வழக்கமாம். அவ்வழக்கத்தின்படி நந்தகோபர் முதலிய ஆயர்களெல்லாம் இந்திரவிழாச் செய்யத் தொடங்கினார்கள். அப்பொழுது கண்ணபிரான்,

''பண்டுசெய்வினையலாற்பரவுதெய்வமொன்
றுண்டெனிற்றான்பயனுதவவல்லதோ
அண்டர்கோன்பூசனையாற்றுகின்றதால்
கண்டிலனொருபயன்கருதுங்காலையே''

''எவ்வினையேனுமொன்றிழைக்கினீறிலா
தவ்வினையேபயனளித்தல்செய்யுமால்
செய்வினையல்லதுதெய்வமென்செயும்
மவ்வலம்பசுந்தொடைமார்பமற்றரோ''

என்று நந்தகோபரை நோக்கி, நாம் பூர்வத்திற்செய்த வினையே இம்மையில் நமக்குப் பயனைத் தருவதல்லாது பிறிதில்லை. தெய்வமுண்டெனின் அது ஏதாவது பிரயோஜனத்தைக் கொடுக்கிறதா? இல்லையே அங்ஙனமிருக்க இந்திரனுக்குப் பூஜை முதலிய வரிசைகள் செய்வதினால் ஓர் பிரயோஜனமுங் கிடையாது. நமக்கும் மழைக்கும் காற்றுக்கு மிடந்தந்து பசுக்களுக்கும் புகலாய் புல்லுந் தண்ணீரும் உண்டாயிருக்கிற இந்தக் கோவர்த்தனகிரிக்கன்றோ திருவிழா முதலிய வரிசைகள் செய்யவேண்டுமென்று அருளிச்செய்தார். இடையர்களாகையாலே நந்தகோபர் முதலானார்கள் இதற்கு இசைந்து,

''கன்னலின் றீஞ்சுவைக்கனியின்குப்பையும்
பொன்னெடுங்குன்றெனப்பொலிந்ததோர்தலை
தொன்னவில்வெள்ளியங்குன்றமாமெனச்
செந்நெல்வெள்ளடிசிலோர்திசைமலிந்ததால்''

என்றபடி கனிவர்க்கங்களையும், வெள்ளடிசிலையும் மகாமேரு பருவதத்தைப்போலவும், வெள்ளியங்கிரியைப் போலவும் குவித்து அவற்

றுடன், வெண்ணெய் பால், தயிர்களையும் மிகுதியாகப் பெய்வித்துக் கோவர்த்தனத்தை நாண்மலர்களாலும் தூபதீபங்களாலும் அருச்சித்தார்கள் அப்பொழுது கண்ணபிரான்,

"அவிழ்ந்ததாமரைமலரனையசெங்கணான்
நிவந்தகோவத்தனமாகிநெய்யொடு
குவிந்தவால்வல்சியுங்கூட்டுண்டவ்வழி
உவந்தனமெனச்சிலவுரைவழங்கினான்"

என்றபடி கோவர்த்தனகிரியின் வடிவாகி ஆயர்களால் உவந்து கொடுக்கப்பட்ட பாலடிசில் முதலியவற்றை எல்லாம் உண்டதுமன்றி ஆயர்களோடு கூடியிருந்து இந்தக் கோவர்த்தனமானது நம்மால் கொடுக்கப்பட்ட அன்ன முதலியவற்றை எல்லாமுண்டு உவந்தோமென்று வாய்விட்டுங் கூறியதே இது என்ன ஆச்சர்யமென்றான். அதன்பிறகு ஆயர்கள் ஆடிப்பாடித் துதிசெய்தார்கள். இஃதிங்ஙனமாக உண்ணவிருந்தவனாகிய இந்திரன் உண்ணப்பெறுமையாலும், பசிக் கோபத்தாலும்

"ஒருமகன்காப்பதூஉமுயர்பொற்கோட்டதோர்
கருவரைகாப்பதூஉங்காணத்தக்கதால்
வருகமாமுகிற்குலம்வாரிவற்றிடப்
பருகுபுசொரிகெனப்பணித்திட்டானரோ"

என்றபடி மேகக்கூட்டங்களை யழைத்துக் கல்வர்ஷம் வர்ஷிக்கக் கட்டளையிட்டான். அவைகளும் அங்ஙனமே செய்ய அப்பொழுது பசுக்கூட்டங்களும் வருந்தின. ஆயர்களும் வருந்தினார்கள். இது கண்ட கண்ணபிரான் உடனே கோவர்த்தன மலையைப் பெயர்த்தெடுத்து, ஆயர்களும், பசுக்களும் அடைந்த வருத்தத்தை அகற்றினான். அப்பொழுது,

"எர்வண்ணம்வெவ்வேறெதிருழிதோறெய்துமீங்குக்
கார்வண்ணமெய்திக்கருங்கண்ணனென்றேத்தநின்றான்
போர்வண்ணநேமிப்புயலென்றனன்கர்க்கனென்னா
ஓர்வண்ணநோக்கியுயர்நந்தனுவந்துரைத்தான்"

என்றபடி ஒவ்வொரு யுகங்களிலும் புருஷர்களின் குணநிலைக்கேற்றபடி வெண்மைநிற முதலிய பல வேறுபாடுடைய திருமேனியோடு திருவவதரிக்கின்ற சக்கரப்படையை யுடைய திருமாலே இங்கு வந்தவதரித்திருக்கிறாரென்று கர்க்கர் என்ற புரோகிதர் முன்னரே உணர்த்தினாரன்றோ என்று நந்தகோன் மகிழ்வுற்றுரைத்தான். அதன்பிறகு,

"ஓரேழ்பருவத்தொருதோன் றலோர்குன் றமேந்தி
ஓரேழ்கருங்காரொழியாதுபொழிந்தமாரி
ஓரேழ்பகல்காத்தளித்தானெனவுன்னியுன்னி
ஓரேழுலகத்தெவர்நெஞ்சமுகக்ககில்லார்"

என்றபடி கண்ணபிரான் ஏழாம்பிராயத்தில் ஏழுநாள் வரை ஒழிவின்றிப் பெய்த ஸப்த வர்ஷங்களைக் கோவர்த்தனமெடுத்துக் காத்த அருஞ்செயலை என்னென்பதென ஆச்சர்யங்கொண்டு எல்லோருங் கொண்டாடினார்கள். பின்னர் இந்திரன்,

"உரைவாயிகந்துள்ளுணர்வுங்கடந்தோங்கிநிற்பாய்
தரைவாய்ப்பிறந்துதனிநல்லறங்காத்தல்செய்வாய
விரைவாய்மலர்மேலுறைவாய்வரைவீற்றிருப்பாய
திரைவாய்த்துயில்வாயநினையெங்ஙனந்தேர்வல்யானே"

"மாற்றற்றபொற்றாமரையாள்புணர்மாலைமார்பா
ஆற்றற்றிகிரிப்படையாய்வெறுப்பார்வமில்லாய்
சீற்றத்திழைத்தசெயலீதுபொறுத்தியென்னாப்
போற்றிப்பணிந்தான்பசும்பொன்னகர்போற்றும்வேந்தன்"

மனம் வாக்குக் காயங்களுக் கெட்டாத பரம்பொருளே! புவியிற் பிறந்து தரும பரிபாலனஞ் செய்கின்றவனே! பிர்ஹ்மாதிகளுக்கும் அந்தராத்மாவா யிருப்பவனே! அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பனே! அடியேன் கோபத்தால் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டுமென வேண்டினான். அப்பொழுது கண்ணபிரான் இந்திரனை நோக்கி 'நீ சுவர்க்கலோகாதிபதியாயிருந்து இன்பம் அனுபவித்ததினால் இன்னது செய்வதொழிவதென்பது தோற்றாது கொர்வங் கொண்டிருந்தாய் அதை ஒழிப்பதற்கு இங்ஙனஞ் செய்தோம்' என்று அருளிச் செய்து விட்டு அவனுக்கு அநுக்ரகம் செய்தார்.

"நிலங்காத்தகோவேநெடுங்குன்றினின்மாரிகாத்தென்
குலங்காத்ததெய்வக்கொழுந்தேயருள்வாழியென்னாப்
புவங்காத்துயர்விட்புலஞ்சேர்பொலங்கோதைமாதர்
கலங்காத்தகண்ணன் றனைச்சார்ந்ததுகாமதேனு"

என்றபடி காமதேனுவானது கண்ணபிரானை யடைந்து என் குலமாகிய பசுக் கூட்டங்களைப் பாதுகாத்த தெய்வக் கொழுந்தே! நீ வாழக்கடவாய் என்று போற்றியது. அவ்வாறே,

"பாட்டுற்றவண்டுபடிந்தூதுபொற்பாரிசாதக்
கோட்டுற்றதெய்வக்குளர்நாண்மலர்கோத்திறுத்துச்

சூட்டிற்றுநீண்டதொளைக்கைகொடுகங்கைவாரி
ஆட்டிற்றுக்கண்ணற்கயிராவதமாங்கடைந்தே''

என்றபடி ஐராவதம் என்ற யானையும் நாண்மலர் முதலியவற்ருல் கண்ணபிரானை அருச்சனை செய்தது. பின் இந்திரன் கோக்களின் துயரகற்றிநின்ற கண்ணபிரானுக்குக் கோவிந்தனெனப் பெயர் சூட்டினன். அரம்பை, ஊர்வசி, முதலிய தேவமாதர்களும், ஆடல், பாடல்களைச் செய்து ஸ்தோத்திரஞ் செய்தார்கள்; கின்னரர், கிம்புருடர்களும் பாடிப் பரவினர்கள்; தேவர்களும் மலர் தூவி ஆரவாரித்தார்கள்; மேலும் இந்திரன் கண்ணபிரானை வணங்கிநின்று தேவரீர் திருவடியை மறவாதிருக்கும்படி அடியேனுக் கருள்புரிய வேண்டுமெனப் புகழ்ந்துரைத்துத் தன்னிருப்பிடஞ் சென்றான்.

இவ் விருத்தாந்தத்தைக்குறித்து ஆழ்வாரும்,

''மலையையெடுத்துக்கன்மாரிகாத்துப்பசுநிரைதன்னைத்
தொலைவுதவிர்த்தபிரானைச்சொல்லிச்சொல்லிநின்றெப்போ
தலையினோடாதனந்தட்டத்தடுகுட்டமாய்ப்பரவாதார் [தும்
அலைகொள்நரகத்தழுந்திக்கிடந்துழைக்கின்றவம்பரே''

என்று பாராட்டி அருளிச்செய்தார். நிற்க,

இவ் விருத்தாந்தத்தில் கண்ணபிரான், ஆயர்களை நோக்கித் தேவதாந்தர பஜனம் பண்ணலாகாதென்று தவிர்த்துள்ளான். இது விஷயம் இங்கு ஆலோசிக்கத்தக்கது.

''வணங்குந்துறைகள்பலபலவாக்கிமதிவிகற்பால்
பிணங்குஞ்சமயம்பலபலவாக்கியவையவைதோ
றணங்கும்பலபலவாக்கிநின்மூர்த்திபரப்பிவைத்தாய்
......................''

என்று, ஆழ்வார் அருளிச்செய்தபடி தேவதாந்தரங்களும் தேவதாந்தர வழிபாடுகளும் ஸர்வேசுவரனுடைய ஆஜ்ஞாரூபமென்றே விளங்குகின்றன. அங்ஙனமிருக்க, இங்குக் கண்ணபிரான் தேவதாந்தர பஜனம் கூடாதென்று விலக்கியது எவ்வாறு பொருந்துமெனின்?

அத்வாராநுக்ரஹார்த்தமாக ஸாக்ஷாத்தாய்த் தான் எழுந்தருளியிருக்கும்போது ஸத்வாரகோபாஸமான தேவதாந்தர பஜனங்கூடாதென்பதை உணர்த்துகைக்கும், இந்திராதி தேவதைகளின் அஜ்ஞானத்தைப் போக்குகைக்கும் திருவுள்ளம் பற்றினமையால் பொருந்துமென்க. இதனால் பகவத் ஸந்நிதியில் ஈசுவரனை யொழிந்த இதரதேவதைகளின் ஸேவை அபசார ஹேதுவாமென்று அறியத்தக்கது.

செல்வம்.

செல்வமென்பது அருட்செல்வம், கல்விச்செல்வம், செவிச்செல்வம், மக்கட்செல்வம், பொருட்செல்வம் எனப் பலபடியாக வழங்கப்பட்டு வருகிறபடியால் இது பொதுப்பெயரென்று அறியலாம். இங்கு உண்ணல், உடுத்தல் முதலிய இன்பங்களை அநுபவிப்பதற்கு உபகாரமாயிருக்கின்ற பொருட் செல்வத்தைப் பற்றிய ஆராய்ந்துரைக்கப்படும்.

இப் பொருட்செல்வம் அற்பர்களிடத்தில் போய்ச் சேரினும் அவர்களையும் உயர்ந்தவர்களாகவும் பிறரை அடிமை கொள்வதற்கு உரியவராகவும், யாவராலும் புகழப்படுபவர்களாகவும், தர்மார்த்தங்களை அடைதற் குரியவர்களாகவும், செய்யும். இதன் சிறப்பைப்பற்றி ஆழ்வாரும்,

"பொருள்கையுண்டாய்ச்செல்லக்காணில்போற்றி
யென்றேற்றெழுவர்" என்றும்

"கொண்டாட்டுங்குலம்புனைவும்..........." என்றும்

அருளிச் செய்தார் பிறரும்,

"பொருளல்லவரைப்பொருளாகச்செய்யும்
பொருளல்லதில்லை பொருள்" (குறள்) என்றும்

"செய்கபொருள்யாருஞ்செறுவாரைச்செறுகிற்கும்
எஃகுபிறிதில்லையிருந்தேயுயிருண்ணும்
ஐயமில்லையின்பமறனோடெவையுமாக்கும்
பொய்யில்பொருளேபொருண்மற்றல்லபிறபொருளே"
(சிந்தாமணி)

என்றும்,

"கல்லானேயானாலுங்கைப்பொருளொன்றுண்டாயின்
எல்லாருஞ்சென்றங்கெதிர்கொள்வர்" (நல்வழி)

என்றும் கூறினார்கள்.

உயர்ந்தோராயினும் அவர்களிடத்தில் பொருட்செல்வமில்லாதிருக்குமாயின் அவர் எல்லாரிலுங் கடையராய், எவர்க்கும் ஏவல் புரிபவராய், எப்பொழுதும் மனச்சஞ்சல முடையவராய் இருப்பர். இதைக்குறித்து ஆழ்வாரும் "இருள்கொள் துன்பத் தின்மைகாணில் என்னே யென்பாருமில்லை" என்று அருளிச் செய்தார். பிறரும்,

"பொருளில்லார்க்கின்பமில்லைபுண்ணியமில்லையென்றும்
மருவுறுகீர்த்தியில்லைமாந்தருட்பெருமையில்லை
கருதியகருமமில்லைகதிபெறுவழியுமில்லை
பெருநிலத்திடைநடக்கும்பிணமெனப்படுவரன்றே"
(பஞ்சதந்திரம்)

என்றும்,

"....... ....இல்லானை
இல்லாளும்வேண்டாள்ஈன்றெடுத்ததாய்வேண்டாள்
செல்லாதவன்வாயிற்சொல்" (நல்வழி)

என்றுங் கூறினார்கள். இதனால் பொருளினது பெருமையும் அஃதில்லாமையின் சிறுமையும் எடுத்துரைக்கப்பட்டன.

இனிச் செல்வத்தின் பெயர்க் காரணத்தையும் அதனியல்பையும் அது பெற்ற ஸ்ரீமான்கள் செய்யத்தக்க கடமைகளையும் ஆராய்ந்துரைக்கப்படும்.

செல்வம், கள்வர் என்பதுபோல செல் பகுதியும் வகர உடம்படு மெய்யும் அம் வினைமுதல் விகுதியும் பெற்றபெயர். அஃதாவது கள் + வ் + அர் கள்வர் என்றாவதுபோல செல் + வ் + அம் செல்வமென்றாயிற்று. இதன்பொருள் செல்லுதலை யுடையதென்பதாம். எனவே ஓரிடத்தில் நிலைபெற் றிராததென்பது விளங்கும். இது விஷயம் கீழ்க்குறிப்பிடுமவற்றாலும் அறியலாம்.

ஒவ்வொருவரும் செலவுக்கு வேண்டுமென்றே பொருள் தேடுகின்றாராதலால் அவர் அதை வைத்திருக்கவேண்டுமென்ற கருத்தில்லாதவராய் வந்தபொருள் தானே செலவழியுமென்றும், செலவழித்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும் அறிந்திருக்கிறார்.

மேலும் தமக்குக் கிடைக்கவேண்டிய பணத்தில் (ரூபாவில்) சிறிது தேய்ந்ததாயிருக்கிலும், சத்தமில்லாதிருந்தாலும், குத்துப் பட்டிருந்தாலும் அதை வாங்கிக்கொள்ளாமல் வேண்டாமென்று கொடுத்துவிடுகிறார்கள். அதற்குக் காரணம் யாதென்றால்? இது செல்லாதென்று சொல்லுகிறார்கள். இதனாலும் அப்பொருள் தம் கையைவிட்டுச் செல்வதே தமக்கு இஷ்டமென்றும், அது தம் கையைவிட்டுச் செல்லாது தம் வசமேயிருப்பது தமக்கு அநிஷ்ட மென்றும் அறியலாம். பொருளைச் செலவிடாமல் சேமித்து வைத்திருப்பதே கருத்தாயின் செல்லாத பணத்தையன்றோ பிரியப்பட்டு வாங்கிவைக்கவேண்டும்; அப்படி வாங்கக் காணுமையாலும் பொருள் தம் கையைவிட்டுச்செல்வதே எல்லார்க்கும் இஷ்டதமமென்று வெளியாயிற்று. இதனாலும் சென்றுகொண்டிருப்பதே செல்வமென்றும் செல்லாது சேமித்து வைக்கப்பட்டது செல்வமன்றென்றும் சொல்லத்தக்கன. இச்செல்வத்தின் இயல் புரைக்க வந்தவிடத்து "அற்காவியல் பிற்றுச்செல்வம்" என்று திருவள்ளுவரும் ஓரிடத்தில் நிலைத்து நில்லாத இயல்பையுடைய தென்று விளங்க எடுத்துரைத்தார்.

ஸர்வேசுவரன் ஒவ்வொரு பொருளையும் சிருஷ்டிப்பதற்கு முன்னர் அதன் இயல்பைத் தன் திருவுள்ளத்திற் சிந்தித்துப்பின் அதற்கேற்ற பெயரை இட்டுச் சிருஷ்டிக்கிறான். அம்முறையில் இப்பொருட்செல்வத்தைச் சிருஷ்டிக்கின்ற காலத்து இது ஓரிடத்தில் நிலைபெற்றிராது எங்கும் சென்று உபகாரப்படவேண்டும், என்ற கருத்தால், செல்வமென்றும், ஸ்ரீ என்றும், திரு என்றும், பொன் என்றும், லக்ஷ்மிக்குரிய பெயரையிட்டுச் சிருஷ்டித்தான். மேலும் லக்ஷ்மிதேவியே இப்பொருட் செல்வத்திற்கு அதிஷ்டான தெய்வமுமாம். இத்திருவென்னும் பெயருடைய செல்வமானது ஐசுவரியமென்று சொல்லப்படுவதாலும் அது ஈசுவரனுடையதென்று அறியத்தக்கதாம்.

இச்செல்வத்தை பூர்வஜென்ம புண்யவசத்தால் மிகுதியும் பெற்ற அரசனைத் திருமால் என்றே கூறுவர். அவ்வாறு கூறுதற்கு ஈசுவரனுடையதாயும் லக்ஷ்மிதேவியின் பெயரால் வழங்கப்படுவதாயுமுள்ள ஐசுவர்யத்தைப்பெற்று உலகைத்தாங்கும் காரணம் பற்றிப்போலும் என்க. ஆழ்வாரும் "திருவுடை மன்னரைக்

காணில் திருமாலைக்கண்டேனே யென்னும்'' என்றார். திருமால் திருவுடையவனாதலால் திருவென்னும் பொருட் செல்வமுடைய அரசனைக்கண்டவிடத்தும் திருமாலென்னும் நினைவு தோன்றிற் றென்று நயம்பட அருளிச்செய்ததும் இங்குப் பாராட்டத்தக்கது. இனி ஐசுவரியம் இன்னதென்பதை ஆராய்வோம்.

தம் குடும்ப ஸம்ரக்ஷணத்துக்குப் போதாத பொருளுடையவரையும், குடும்ப ஸம்ரக்ஷணத்துக்கு மாத்திரமே போதிய அளவுடைய செல்வரையும், ஐசுவரியமுள்ளவரென்று சொல்வதில்லை. ஆகையால் அவர்கள் செல்வம் ஐசுவரியமாகாது. ஏனெனில்? எல்லோரையும் ரக்ஷித்தற்குக் கடமைப்பட்டிருக்கிற ஈசுவரன் இவர்கள் போகார்த்தமாக இவர்களுக்கென்றே அப்பொருளைக் கொடுத்தபடியால் அது இவர் மக்குரியதாகவே இருக்குமென்க. இனித் தம் குடும்ப ரக்ஷணத்துக்கு வேண்டிய அளவுகண்டு விஞ்சிய செல்வர்களையே ஸ்ரீமான்களென்றும், திருவாளரென்றும் ஐசுவர்யவான்களென்றும், செல்வர்களென்றும், ஸம்பந்நர்களென்றும், சொல்லுகிறார்கள். அதனால் அவர்களுக்குக் கண்டு மிகுந்த திரவியமே ஸ்ரீ என்றும், திருவென்றும், ஐசுவர்யமென்றும், செல்வமென்றும், ஸம்பத்தென்றும், வழங்கப்படும். இந்த ஸ்ரீஆனது அதின் அதிதெய்வம் அகப்பட ஈசுவரனுடையதாயிருப்பதால் அதை ஒவ்வொரு செல்வவானும் தம்முடைய சொத்தாய் நினையாமல் ஈசுவர சொத்தாக நினைத்து அவன் ஆஜ்ஞா ரூபமான சாஸ்திரோக்தரீதியாக ஸத்விஷயங்களிற் செலவிட்டு வந்தால் அது ஐசுவரியமாகவே இருக்கும் அப்படியன்றித் தம்முடைய சொத்தாக நினைத்துச் சேமித்து வைத்தாலும் தமக்கிஷ்டமான துர்விஷயங்களில் செலவிட்டாலும் ஐசுவர்யமாக நில்லாது; அழிவது மன்றிப் பரத்ர வ்யாபஹாரம் செய்த பாபத்துக் குள்ளாவார்கள். லோகத்தில் தம்மோடொத்த தரமுடைய பிறர் சொத்தை அபகரித்தால் பரத்ர வ்யாபஹாரம் செய்தானென்று இம்மையிற் பழியும், மறுமையில் யமதண்டனையும் அடைவார்களென்றால்; பரமபரனான ஸர்வேசுவரனுடைய ஐசுவர்யத்தை அபகரித்தவர்கள் மஹா பாபத்துக்குள்ளாவார்களென்பது சொல்லாமலே அறியலாம். ஸத்விஷயங்களில் செலவிட்டால் செல்வம் அழிந்துவிடுமென்று கருதவேண்டா.

"அகன்மர்ந்து செய்யாளுறையுமுகனமர்ந்து
நல்விருந்தோம்புவானில்'' (குறள்) என்றும்

"வித்துமிடல்வேண்டுங்கொல்லோவிருந்தோம்பி
மிச்சின்மிசைவான்புலம்" (குறள்) என்றும்

கூறியபடி நல்ல விசுவாசத்தோடு ஐசுவர்யத்தை ஸத்விஷயங்களில் செலவிடுவான் ஸ்ரீ ஸம்பத்தோடு பூ ஸம்பத்தும் ஒருங்கமையப் பெறுவான். இதனால் ஈசுவரபத்னிகளாகிய ஸ்ரீதேவி பூதேவி யார் இவனை அபிமானித்துப் போருவர்களென்பது திருவள்ளுவருக்கும் அபிமதமென்றறியலாம். இனி ஸத்விஷயத்தில் செலவிடாத சம்பத்தும் பயனில்லாமற் போய்விடுமென்பது உரைக்கப் படும்.

இந்திரியம் என்று பெயரையுடையனவாகிய கண் கை கால் முதலிய அவயவங்கள் ஈசுவர விஷயத்தில் உபயோகப் படாதொழியின்; அவை, "கண்ணென்ன கண்ணே" என்றும் "செவியென்ன செவியே" என்றும் "நாவென்ன நாவே" என்றும் "கையல்ல கண்டாமே" என்றும் "நெஞ்சல்ல கண்டாமே" என்றும் சொல்லுகிறபடியே பிரயோஜனமற்றனவாய் விடுவனபோல ஸத்விஷயத்திற் செலவிடாத ஸம்பந்நர்களுடைய ஸம்பத்தும் அங்ஙனமே ஒழியும்.

ஸர்வ ரக்ஷகனும் தர்மாத்மாவாயுமிருக்கிற ஈசுவரன் அபிப்பிராயத்தால் ஐசுவர்யமானது ஸத்விஷயங்களிலே உபயோகமாகச் சென்றுகொண்டிருக்கக் கடவதென்றே சிருஷ்டிக்கப்பட்டது. இங்ஙனமுள்ள ஐசுவர்யத்தை ஸத்விஷயங்களில் செலவிட்டால் அழிந்துவிடுமென்று கருதி அதை இறுகப் பொதிந்து பெட்டியுள் வைத்து முத்திரையிடுவார்களாயில், திருமகளைச் சிறையிட்டவர்களாவார்கள். ஆகவே இராவணனுடைய இலங்கைசுவர்யம் அழிந்ததுபோலப் பின் திருமகளின் சாபத்தால் அவர்கள் குடும்பத்திற் பிறக்கும் புத்திரர்கள் துஷ்டர்களாய்த் தோன்றி,

"நம்பனடியவர்க்குநல்காத்திரவியங்கள்
பம்புக்காம்பேய்க்காம்பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காம்கள்ளுக்காம்கோவுக்காம்சாவுக்காம்
கள்ளுக்காம்தீக்காகுங்காண்" (ஔவையார்)

என்றபடி ஸம்பத்தெல்லாம் வீண் செலவிடுவார்கள். இது லோகத்தில் இப்பொழுதும் பிரத்யக்ஷமா யறியலாம். ஸம்பந்நராயிருந்தும் நல் விஷயத்தில் ஐசுவரியத்தை செலவிடா தொழிவாராயின், ஸம்பந்நரென்று கருதப்படமாட்டார். இது விஷயத்தைத் திருவள்ளுவரும்,

"உடைமையுளின்மைவிருந்தோம்பலோம்பா
மடமைமடவார்கணுண்டு" என்றும்

"இன்மையுளின்மைவிருந்தொரால்" (குறள்)

என்றும் கூறினர். இதனால் ஸத்விஷயத்திற் செலவிடாதவன் கைப்பொருளுடையவனுயிருந்து வைத்தும், இல்லாதவனுவான் என்றும், அவனே தரித்திரர்களிலும் தரித்திரனுவானென்றும் உரைக்கப்பட்டன. செல்வர்கள் ஐசுவர்யத்தை ஸத்விஷயத்தில் செலவிடாது எம்முடையது எம்முடையது என்று அபிமானித்துக் கொண்டிருப்பதைப் பிறரும் எம்முடையதென்றே அபிமானிக்கலாமென்று ஒரு புலவர் கூறியதையும் இங்கு அறியத்தக்கது. அது வருமாறு,

"எனதெனதென்றிருக்குமேழைபொருளை
எனதெனதென்றிருப்பன்யானும்—தனதாயின்
தானுமதனைவழங்கான்பயன்றுவ்வான்
யானுமதனையது"

என்பதாம். பொருள் லோபகுண முடையவன் தன் அறியாமையால் தன்னுடையதெனக் கருதிய பொருளை யான் என்னுடையதெனக் கருதுகிறேன். இவ்வாறு கருதுதல் கூடுமோவெனின்? அவன் தன்னுடையதென்று அபிமானித்தபொருள் அதற்குப் பொருத்தமாக அப் பொருளைப் பிறர்களுக்கு வழங்குகின்றனில்லை; அதின் பிரயோஜனத்தைத் தானும் அநுபவிக்கிறனில்லை; அவ்வாறே யானும் அப்பொருளை பிறர்க்கு வழங்காமலும் அதன்பயனை அநுபவிக்காமலும் இருக்கின்றேன்; ஆக வழங்கல், பயனநுபவித்தலாகிய இரண்டும் இருவருக்கும் இல்லாமை இயைந்துகிடக்கின்றமையால் இருவருமே அப்பொருளை யுடையவரில்லையென விளங்குகின்றது. உரியவிஷயத்தி லுதவாதுவைத்த செல்வத்தைப்பற்றி ஒரு கவி சொல்லியிருப்பதும் இங்கறியத்தக்கது.

"தன்போலுலகம்புரக்கின்றவாணன்றமிழ்த்தஞ்சையார்
மன்போலெவர்க்கும்வழங்கியுண்ணுதவர்வைத்திழக்கும்
பொன்போலிறுகப்பொதிந்துகொண்டாளன்னைபூவையென்ன
அன்போவயன்மடவாரலர்தூற்றியவாறுகண்டே"

இது "இல்வயிற் செறித்தமை செப்பல்" என்ற துறையின்பாற்படும். தாயானவள் தலைவியின் சரீரத்தின் வேறுபாட்டைக் கண்டும் ஊரிலுள்ளார் கூறும் பழிச்சொல்லைக் கேட்டும் தலைவியைச் சிறையிட்டு வைத்தாள். அப்பொழுது தலைமகள் தன் பாங்கியை

281

நோக்கிக் கூறியதாகும். தாய், தன்னைச் சிறையிலிட்டதே அவளுக்கு யான் உபயோகப்படாமல் போவதற்கு ஹேதுவாய்விட்டதென்பதை விளக்குதற்கு "தமிழ்த்தஞ்சையார், மன்போலெவர்க்கும், வழங்கியுண்ணாதவர் வைத்திழக்கும், பொன்போல்" என்றாள். இங்குப் பொருள்போலென்னாது பொன்போலென லக்ஷ்மிக்குரிய வாசகத்தால் வழங்கியதும் பாராட்டத்தக்கது. பொருளுடையார் பொருளை அறநெறியிற் செலவிட்டால் அது அழிவின்றிப் போக்குவரத்துடைத்தாய் பொருளுடையார்க்குப் பிரயோஜனப்படுவதுபோல் என்னைத் தலைமகனுக்கு மணம் புணர்வித்திருந்தால் யானும் போக்குவரத்துடையவளாயிருந்து தலைமகனாலும் பெற்றவளாகிய இவளாலும் அநுபவிக்கப்படுவேன். அது செய்யாமல் என்னை இப்பொழுது சிறையிட்டதினால், நல்லவழியில் வழங்காத செல்வர்களின் சிறையிட்ட செல்வம் அவர்களுக்கு உபயோகப்படாது அநுபவிப்பாரையடைந்து பயன்படுவதுபோல பெற்றவளாகிய இவளுக்கு இனி யான் உதவாமல் தலைவனைநாடிச் சென்றுவிடுவேனென்றாளென்க. இதனான் செல்வர்கள் லோபகுணத்தால் பொருளை இறுகப் பொதிந்துவைத்தாலும் அது அவர்களுக்குப் பிரயோஜனப்படாமல் அழிந்துவிடுமென்று வெளியிட்டதாயிற்று.

"செல்வமென்பதுசிந்தையின்நிறைவே
அல்காநல்குரவவாவெனப்படுமே"

என்றபடி மனோதிருப்தியுடைமையே ஸம்பத்தென்றும் பொருளாசையுடைமையே தரித்திரமென்றும் சொல்லப்பட்டன. ஸம்பத்துடையவர் மேன்மேலும் ஆசைகொண்டு தரித்திரத்தன்மை அடைவதைக் காட்டிலும் மனோதிருப்தியால் செல்வமுடைமையடைதல் சிறந்ததாயிற்று. ஆகவே ஐசுவரியவான்களெல்லோரும் தங்களுடைய ஐசுவர்யத்தை ஈசுவர சொத்தாக நினைத்து அதற்குத் தம்மை ஒரு தர்மகர்த்தாவாக எண்ணி தேவஸ்தான தர்மகர்த்தாக்கள் தேவஸ்தானப் பொருளை ஸம்ரக்ஷித்து தேவ கைங்கர்யங்களில் செலவிட்டு வருவதுபோல ஐசுவர்யத்தை வேண்டிய அளவில் ஸம்ரக்ஷித்து ஸத்விஷயங்களில் வினியோகப்படுத்தி வருவார்களாகில், அவர்களிடத்தில் ஸ்ரீமானான ஸர்வேசுவரனும் ஸ்ரீதேவி பூதேவியரும் தம் ஐசுவர்யம் நல்வழிப்படுவதுகண்டு போர உகந்தருளுவார்களென்று அறியத்தக்கது. ப. — அ.

ஸ்ரீ:

ஸ்யமந்தகமணி விருத்தாந்தம்.

(200-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் நாடோறும் இனிமையாகக்கையாண்டுவருகிற மதுபானத்தை இதற்காக நீக்கவேண்டியதாய் நேரும், ஆகையால் நீவிரே முன் போலத்தரித்து இவ்விராஜ்பத்திற்குச் சுகத்தையுண்டாக்கக் கடவீரென விரிவாய் எடுத்துரைத்தனர். அங்ஙனமே அக்குரூரர் அவர் நியமனத்தை மேற்கொண்டு ஸ்யமந்தகமணியைத் தரித்துச் சூரியனைப் போல் விளங்கி இராஜ்பத்திற்குச் சுகத்தை யுண்டுபண்ணிக் கொண்டுவாழ்வுற்றிருந்தனர்.

இவ் விருத்தாந்தத்தில், ஒப்புயர்வற்றவனாய், தர்மஸ்தாபனம் பண்ணப் பிறந்தவனாய், தர்மாத்மாவாய் விளங்கிய கண்ணபிரானுக்கும் ஒரு மணியினால் அபவாதமுண்டாயிற்றென்று குறிப்பிடப்பட்டது. அர்த்தகாமம் என்ற இரண்டினாலே உலகத்திற் பழி முதலிய வுண்டாகும் என்று ஆன்றோர் கூறுவர். அவ் விரண்டில் அர்த்தத்தால் நேர்ந்த பழிக்கு இவ் விருத்தாந்தம் திருஷ்டாந்தமாய் அமைந்துகிடக்கிறது.

ஸ்யமந்தகமணியை நற்சிந்தையும், நல்லொழுக்கமுமில்லாத பிரசேனன் தரித்து உயிர் துறந்தான் என்றதினாலும், கண்ணபிரான் முடிவிற்கூறிய உபந்யாஸத்தில் நல்லொழுக்கமுடையவனே இம் மணியைப்பெற்று உலகிற்கு நன்மைசெய்யக் கடவன் என்று அருளியதினாலும், முன் "செல்வம்" என்ற வியாஸத்திற் கூறியபடி ஐசுவர்யத்தை ஸத்விஷயத்திற் செலவிடும் ஸத்குணமுடைய ஸம்பந்நர்களிடத்திலே பொருட்செல்வம் நிலைபெற்றிருந்து பிறருக்குப் பிரயோஜனப்படுமென்பது, விளங்குகிறது.

அடியோங்கள் தேவரீருக்குத் திருவடித் தொண்டர்களாய் இருந்து நித்ய முக்தர்களாகுமாறு ஆட்கொண்டருளவேண்டும்;'' என்று அம்பரீஷ மஹாராஜன் அளவுகடந்த அன்போடு எம்பெருமானைப் பன்முறை இரந்து வேண்டிக்கொண்டான்.

அவ்வாறே அவ்வரசர்பெருமான் ஒரு நூறாயிர வருஷமளவும் அங்கிருந்து தவஞ்செய்தான். துவாபரயுகத்தின் அந்திமகாலம் நெருங்கியது. அப்பொழுது துளவமாலையணிந்த ஸ்ரீ சுந்தரராஜப் பெருமான் அவன் முன்பு தோன்றி, 'விரோதிநிரஸனசீலனான ஓ வேந்தர்வேந்தே! நீ எமக்கு அன்புடன் செய்த கைங்கர்யங்களால் அளவில்லாத சந்தோஷமடைந்தோம்; இம் மதுரைக்கு மிகவும் சமீபதேசத்தில் ஹஸ்திகிரியென்று ஒரு மலையுள்ளது; அவ்விடத்தில் கோயில்கொண்டு நரஸிம்ஹரூபியாய் ஸேவைஸாதிக்கின்ற நம்மை நீ நாள்தோறும் ஆராதிப்பாயாக; அதன்பொருட்டு இப்பொழுதே நீ அவ் வரையை நோக்கிப் புறப்படு; அங்கே சிலகாலம் யோகநிஷ்டையிலிருந்து சீக்கிரத்தில் மோக்ஷத்தையும் அடைவாய்:' என்று திருவாய்மலர்ந்தருளினான்.

அவ் வார்த்தைகளைக் கேட்டவுடனே அம்பரீஷனுக்கு அகமகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் உண்டாயின. அவன் பெருமானைப் பணிந்து விடைகொண்டு யானைமலையைச் சென்றடைந்தான். அடைந்தவன் அங்குள்ள ரோமசருடைய ஆசிரமத்தில் ஞானசமாதியிலிருந்து நாட்கள் சிலவற்றைக் கழித்தான். கூடலழகப்பெருமாள் கூறிய ஹிதவசனங்கள் அவன் நெஞ்சில் எப்பொழுதும் குடிகொண்டிருந்தன.

இங்ஙனம் அரசன் எம்பெருமானுடைய திருவடிகளையே எண்ணியவண்ணமாய் ஸமாதியிலிருக்கையில், ரோமசர்பொருட்டு யானைமலையில் நரஸிம்ஹமாய் எழுந்தருளியுள்ள நாராயணன் அவனுக்கு ப்ரஸந்நனாய்ப் பரமபதமளித்தான். அதனால் அவன் பாஞ்சபௌதிகமான சரீரத்தை இவ் வுலகத்திலே கழித்துப் போகட்டு, அமரர்கட்கும் அடைதற்கரிதான உயர்ந்த உலகத்தில் நிரதிசய ஆனந்தம் அநுபவிக்கலானான். இக் கதை பூர்வம் ஸாரஸ்வத க்ஷேத்ரத்தில் நாரத மஹரிஷியால் எனக்கு நவிலப்பெற்றதாகும்.

அந்த யானைமலையில் ஆளரியாயுள்ள அச்சுதனே முன்பு ஸனகர் முதலான முனிவர்களுக்கு முத்தியை நல்கினன். அன்றியும் அனே ரோமசமுனிவருக்கு அருள்சுரந்து அவருடைய பிறவித்துயரை மாற்றினன் அம் மலையினருகே அவர் யோகநிஷ்டையில் அமர்ந்திருந்த காலத்தில் எம்பெருமான் அவருடைய கண்களுக்கு எதிர்ப்பட்டான். உடனே அவர் அவனைப் பலவாறுகப் புகழ்ந்து நமஸ்கரித்துத் தனக்கு அழிவில்லாத ஆயுளை அளிக்குமாறு வேண்டினர். அவனும் அவ்வாறே முனிவருக்கு அநுக்ரஹித்தான். அதனால் அவர், ஒருபதினுயிரம் கற்பமளவும் உயிர் பெற்றிருப்பவர்களான பல ப்ரஹ்மாக்களினுடைய ஜீவியகாலத்தைப் பெற்று, அன்பும் அறிவும் நிறைந்து பின்பு வீட்டுலகத்தில் இறுதியில்லாத இன்பவாழ்க்கையும் எய்துதற்குரியரானார்:'' என்று வ்யாஸர் சொல்லிமுடித்தார்.

ஊர்வசி சாபநீங்குதல்.

சௌனகாதி முனிவர்கள் மறுமுறையும் வ்யாஸரை நோக்கி, "பராசர புத்ரரான ஓ முனிசிரேஷ்டரே! ஸகல சாஸ்த்ரங்களையும் ஓதியுணர்ந்த உத்தம புருஷரே! உமது உபதேசமொழிகளால் யாங்கள் அறியவேண்டுவனவெல்லாம் அறிந்தோம்; உமது திருவாக்காகிய அமிர்தத்தைத் தெவிட்டுமாறு உட்கொண்டும் எமது விடாய் தணிந்திலது; மேலும் மேலும் உம்மை வினவியறியும் வேட்கையும் மிகுகின்றது; ஆதலால் ஓ ஸ்வாமியே! வேகவதிக்கரையில் விச்வகர்மாவினுல் நிர்மிதமான அந்த விமானத்திலுள்ள வ்யூகசுந்தரனை வழிபட்டுய்ந்தவர் இன்னும் எவரேனு முளரோ? அன்றியும் அங்கு நிகழ்ந்த அதிசயம் ஏதேனுமுளதோ? அவற்றை எமக்கு அருளிச்செய்யவேண்டும்:'' என்று விஜ்ஞாபித்தனர். வேதவ்யாஸரும் அவ்வாறே விளம்புவதானார்.

கலியுகத்தின் முற்கூறுனகாலத்தில் சந்த்ரகுலத்தோன்றலான சக்ரவர்த்தியொருவனிருந்தான். புரூரவனென்பது அவன் பெயர். அவன்,—

ஒலிகெழும்பரவைசூழுலகமொருகுடைநிழலில்
உலகனைத்தையுமணைத்துக்
கலிகடிந்தருள்வழிநடாத்துசெங்கோலினன்
கருதலர்களெறிவேலினன்
மலிபெரும்புகழ்திசைபரப்பினன்மனுநெறி
வரப்பினன்மதிநிரப்பிப்
பொலிவுறும்கலையினன்மதனனையும்வென்றதொரு
பொற்பினன்புயவெற்பினன்.

அந்தப் புரூரவனென்னும் புரவலன் உலகமனைத்தையும் ஒரு குடைக்கீழாண்டனன். அவன் கலி தோஷத்தைக் கடிந்து தன் அருளின்வழியே ஆணைசெலுத்திவந்தான். அவனுடைய ஆளுகையில் விரோதிகளால் விளையுந் தீமைகளின்றிக் குடிகள் அச்சமற்று வாழ்ந்தனர். அவன கல்விக்கடலை நிலைகண்டுணர்ந்து மனுநெறி வழுவாது மன்னுயிரோம்பினமையால், அவனுடைய புகழ் பூமண்டலமுழுதும் பரவிற்று. மலைபோலப் பருத்து வலிமை பொருந்தின தோள்களையுடைய அவன் காமனிலுஞ் சிறந்த கட்டழகுவாய்ந்து விளங்கினன்.

அத்தகைய அரசர்பெருமான் ஒருகாலத்து ஊர்வசியின் பொருட்டுத் தன்னிடத்துண்டான காம மயக்கத்தால் கருத்தழிந்தவனாகி அவளுடன் கலவியிலேயே காலத்தைக் கழித்தான் அவளும் அவனிடத்துக் கரைபுரண்டெழுந்த காதலுடையவளாயிருந்தாள். அதனால் இருவரும் இணைபிரியாமல் இன்பநுகர்ந்தும் அவர்களுடைய ஆசை அடங்காமல் மேன்மேல் அதிகரித்துக் கொண்டு வந்தது:" என்று இவ்வளவும் வ்யாஸர் சொல்லக்கேட்ட அளவிலே சௌனகர் முதலான மஹரிஷிகள் அவரை நோக்கி, "தெய்வ மங்கையாகிய ஊர்வசி இவ் வுலகின்கண் புரூரவ மன்னனோடு பொருந்திப் போக நுகர்தற்குக் காரணம் யாது?" என்று வினவ, முனிவரும் அவ்வரலாற்றை ஆராய்ந்து பின்வருமாறு பேசலுற்றார்.

"ஒரு காலவிசேஷத்தில் தேவலோகத்திலே அமரர்களனைவரும் ஒருசேரக் குழுமியிருந்தனர். அப்போது துந்துபி முதலான வாத்யங்களின் முழக்கம் சமுத்ரகோஷம்போல எல்லாவிடங்களிலும் ஒலித்தது. கந்தர்வர்களும் வித்யாதரர்களும் செவி

களுக்கு நல்ல அமுதப்போன்ற கீதங்களைப் பாகுபடுகின்ற தீங்குரலினால் பாடி யாவரையும் மகிழ்வித்தனர். அரம்பையும் மற்றைத் தேவமாதர்களும் அங்கு நர்த்தனம் புரிந்தார்கள். மேனகையும் திலோத்தமையும் நிலாக்கற்றைகளையொத்த வெண்சாமரை வீசினர். திவ்யமாய் அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தின்மீது வாசவன் இத்துணை விமரிசையுடன் வீற்றிருந்தருளினான். முல்லையரும்பேய்க்கும் முறுவலையுடைய ஐராணியும் அவனருகே அமர்ந்திருந்தனள்.

இருந்தகாலையினிறைந்தவேத்தவையிடையிணைமுலையிறமாப்பத்
திருந்துநூபுரச்சில்லொலிகல்லெனத்திகழுமேகலையார்ப்ப
வருந்தும்மெல்லிடைவல்லியினொல்கிடவளைக்கரம்புடைவீசி
விருந்துவானவர்க்கூட்டியபேரெழில்மின்னுவிட்டெறித்தோங்க,

விடந்ததும்பியவாளெனக்கணையெனவேலெனப்பாலூடே
கிடந்தநீலமாமலரெனப்பரந்திணைக்கெண்டைகளெனத்துள்ளிக்
கடந்துவார்குழைக்கடைகிழித்தாடவர்கருத்தையும்பறித்தோடி
நடந்துமீண்டகண்இரண்டுமேஅநங்கவேள்நடத்தியதூதென்ன,

வடிவின்மேற்புனைசெயற்கையாலியற்கையாம்வனப்பினான்மதிப்பின்றிப்
பிடியிலோதிமப்பெடையெனமிளிருமோர்பெருமிதநடையாளாய்
அடியில்யாவரும்வீழ்வபோல்மயல்கொளஅரும்புபுன்னகையாளாய்க்
கொடிகுலாயமின்படர்ந்தபோலுருவசிகுறுகினாளவ்வேலை.

அவ்வமயம், அன்னப்பெடையின் அழகிய நடையுடன் மின்னற்கொடியொன்று அடிபெயர்ந்து வந்தாலொப்ப ஊர்வசி அங்கு வந்து தோன்றினாள். தன் வளைபொருந்திய கைகளை இருபுறமும் வீசி அவள் நடந்தவருகையில், நூபுரங்களும் மேகலாபரணமும் கலகலவென்று சப்தித்தன. தோற்றப் பொலிவினால் ஒருபொருளை உவமித்துச் சொல்லுதற்கரிய அவளுடைய ஸ்தனங்களிரண்டும், வல்லிபோல் துவளும் அவளது மெல்லிய இடைக்கு வருத்தத்தைச் செய்தன. காதளவும் நீண்ட அவள் கண்ணிணைகள், அநங்கவேள் நடத்திய தூதரைப்போல ஆடவருடைய கருத்தையும் பறித்தோடின. அன்றியும் அவை, விஷம்ததும்பிய வாளும் வேலும் வாளியுமென்னத் தமக்கு இலக்காயினாரைத் துன்புறுத்தும் இயல்பு வாய்ந்திருந்தன. ஒன்றனையொன்று பிரியாது ஒற்றுமைப்பட்ட இரண்டு கெண்டைமீன்களைப்போலத் துள்ளிப் பிறழ்ந்த அவளது

நயனங்களில், சுற்றிலும் வெண்ணிறமாய் இடைப்பட்ட கருவிழிகள், பாலூடே கிடக்கும் நீலோத்பலம்போலப் பரபாகமுடையனவாய்த் தோன்றின.

அவ்வாறு மிகுந்த பெருமிதத்தோடு அங்குவந்தடைந்த ஊர்வசியின் திருமுகத்தில் புன்முறுவல் பூத்து ஆடவரையெல்லாம் அடிமைகொள்ளுமாறு மயக்கத்தை விளைத்தது. அன்றியும், அங்குக் கூடியிருந்த வானவர் கண்களுக்கு நல்விருந்தா யமைந்த ஓர் அபூர்வமான அழகு அப்போது அவளிடம் குடிகொண்டு விளங்கிற்று.

அதனால் அமரர்கள் யாவரும் அவளைப் பலமுறை பார்த்து, பழமைபோலன்றி அவள் மனமும் செய்கையும் மாறுபட்டிருப்பதை அறிந்தனர். முகிலூர்தியான இந்திரனும் முகக்குறிப்பினால் அவளுடைய உள்ளக்கருத்தை எளிதினில் உணர்ந்துகொண்டான். உடனே அவன் அவளை நோக்கி, 'காமமேலிட்டுக் கடுகிவருகின்ற பிடிபோலும் நடையையுடைய ஓ பெண்ணணங்கே! நீ எவனைக் காதலித்து இன்பமடைதற் கெண்ணினை' என்று வினவினான்.

அதுகேட்ட ஊர்வசி, வெட்கத்தினால் தலைகுனிந்து நின்றாளாயினும், தன் விருப்பத்தை வெளியிடாமலிருக்க முடியவில்லை. அதனால் அவள், புருஷோத்தமனென்று மனதினாற் குறித்துப் புரூரவ சக்ரவர்த்தியின் பெயரை யாவரும் அறியுமாறு, தன் தேன்போ லினிய மொழிகளால் தெரிவிக்கலானாள். தெரிவிக்கவே இமையவரனைவரும் அவளை ஏசி இகழ்ந்தனர். தேவபோகத்தை வெறுத்து, மானிடனொருவனை அவள் மனங்கொண்டதற்காக இந்திரனும் எல்லையில்லாத சீற்றமடைந்தான். அதனால் அவன் அவளை உருத்து நோக்கி, 'எடி பேதாய்! இமையவரைக் காட்டிலும் மக்கள் எத்துணையோ இழிந்தவராயிற்றே? அங்ஙனமிருப்பவும் அவர்களுள் ஒருவனை நீ காதலித்தற்குக் காரணம் யாதோ? அஃதெவ்வாறாயினும் ஆகுக; இவ் வானுலகத்து வாழ்க்கையைப் பெறுதல் இனி உனக்கு எவ்வாற்றானும் இயலாததாகும்; இனி உன்னைப் பார்த்திருந்தாலும் யாங்கள் பாபத்திற் குள்ளாவோம்; ஆதலால், நீ இக்கணமே இவ் விண்ணுலகைத் துறந்து மண்ணுலகமடையக் கடவாய்'; என்று சபித்தான்.

அதைக் கேட்டவுடனே ஊர்வசியின் மனம் துணுக்குற்றது. இந்திரனுடைய சாபத்தினாலும் இமையவருடைய இகழ்ச்சியினாலும் அறிவு கலங்கினவளாய்ப் பலவாறாக ப்ரலாபித்து, அவள் தன் விதியை நொந்துகொண்டாள். பின்பு அவள் ஒருவாறு தேறி, வாசவனைப் பலமுறை வணங்கித் தன் இருகரங்களையுங் கூப்பி நின்று, 'ஹே தேவராஜனே! ஆலோசனையில்லாமல், பழவினைத் தொடர்பால் பிழைபடச்சொன்ன என் புன்மொழியைப் பொறுத்தருளவேண்டும்; அன்றியும் அடியாட் கிட்ட இக் கொடிய சாபத்தின் முடிவு கூறி ஆறுதலடைந்து என்னைக் கருணையோடு கடாக்ஷித்தருள்வீராக;' என்று கண்ணீர்விட்டுக் கதறினாள்.

அவள் அங்ஙனம் இரந்துநிற்றலைக் கண்டு யாவரும் இரக்கங் கொண்டார்கள். அதனால் சதமகனும் அவளுக்குச் சாபவிடை செய்தான். 'பெண்மணி! நீ வருந்துதலொழிவாயாக; சிலகாலம் பூலோகத்தில் தங்கியிருந்து பிறகு எப்பொழுதும்போல எம்மிடம் சேரக்கடவாய்;' என்று அவன் அவட்கு இனிதாக இயம்பினன்.

அவ்வண்ணமே ஊர்வசியும் அவ்விடத்தைவிட்டு நீங்கினாள். நீங்கினவள் சந்திரமண்டலம் தரையைநோக்கி இழிவதுபோல, அந்தரமார்க்கமாய் வந்து அவனியை அடைந்தாள். அவ்வாறு அவள் வந்து தங்கின இடம் ஒரு நிர்மாநுஷ்யமான வனப்ரதேசமாய் இருந்தது. காற்றினால் முறித்துத் தள்ளப்பட்டதொரு கற்பகப் பூங்கொம்புபோல அவள் அங்கே படுக்கையிற் கிடந்தாள். அப்பொழுது அவளது கையே அவட்குத் தலையணையாக அமைந்தது. அவள் போர்த்தியிருந்த செம்பட்டாடையினுள்ளே புடைத்துத் தோன்றிய அவளுடைய அவயவங்களெல்லாம், அக்கற்பகக் கொம்பினில் அரும்புகள் முகிழ்த்தாற்போல விளங்கின.

அவ் வனத்தின்கண் ஊர்வசி தன்னந்தனியளாயிருந்து, இனத்தைவிட்டுப் பிரிந்த மான்பிணைபோல மயங்கினாள். புணை கவிழ்ந்த மீகான்போல அவள் நெடுநேரம் புலம்பி வருந்தினாள். அதன்பிறகு அளவில்லாத துன்பத்தினால், கணை உறைபுகுந்தாலென்னக் கண்களைமூடி அவள் அயர்ந்து நித்திரைபோயினாள். அப்பொழுது அவளைப் பார்மகள் தரிக்க, துயிலெனுந் தெய்வமங்கை தானும் துணையிருப்பவள்போல் அவள்பாற் சேர்ந்தனள்.

அவ்வளவில் ஊர்வசி ஓர் அரிய கனுக்கண்டாள். துக்க சாகரத்திலே துயில்பவளான அவள்முன்பு, செந்தாமரைக் கண்ணனான திருமால் ஒரு சுந்தரபுருஷனாகத் தோன்றி அவட்கு அபயமளித்தான். மீண்டும் அவன் அவளை நோக்கி, 'ஹே திவ்யசுந்தரீ! இந்திரியங்களை ஒருப்படுத்தி எம்மையே சிந்தித்திருக்கிற நீ என் துயருறுகின்றனை? இனி அதனை அறவே ஒழித்துவிடு; தேவலோகத்தில் உபேந்திரனாக விளங்குகின்ற நாம், உன்னை வாழ்விப்பதற்காகவே, வையைக்கரையில் கதம்பவனமத்தியில் அஷ்டாங்க விமானத்தில் இங்கு எழுந்தருளியுள்ளோம்; ஆதலால் நீ எம்முடைய அடியவர்க்கடியனான புரூரவனென்னும் புரவலனுடன் கூடி இன்புறுவாயாக; அதன்பிறகு நீ வானுலகமெய்தி வீடுபேறும் அடையக்கடவை;' என்று திருவாய்மலர்ந்தருளினான். உடனே ஊர்வசியும் கண்விழித்தெழுந்தனள். தன் கனவிடைத்தோன்றின புருஷன் வ்யூகசுந்தரனே யாகுமென்று அவள் அவனைப் பலவிதமாக ஸ்தோத்திரம் செய்தாள்.

அவ்வேளையில் புரூரவசக்ரவர்த்தி தன் பரிவாரங்களோடு அவ்வனத்தில் வேட்டையாடுதற்கு வந்தான். வந்தவன் அங்கு ஒப்புயர்வில்லா அழகினையுடைய ஓர் தெய்வமாது நிற்றலைக்கண்டு பெரிதும் வியப்புற்றான். அவளது மலையொத்த முலையையும், வேயொத்த தோளையும், கொடிபோன்ற இடையையும், மான்போன்ற விழியையுங் கண்டு அவன் தான் கருதிவந்த வேட்டமாகிய தொழில் வேறொன்றுண்டென்பதை அறவே மறந்தொழிந்தான்.

போதுகொல்விசும்புகொல்லோபொருப்பகங்கொல்லோசேக்கை
யாதுகொல்அறிகிலேமால்இருநிலத்தியங்கலானும்
காதுகொள்குழைமேற்பாயுங்கண்ணிமைப்பானும்பாரின்
மாதுகொல்எனினும்நெஞ்சம்மயங்குமேமாலைசாந்தால்.

அவளுடைய அழகைக்கண்டு, செந்தாமரைப்பூவில் வசிக்கும் திருமகள்தானோ? அன்றி அரம்பை முதலான தேவமாதருள் ஒருத்தியோ? அல்லது வரையரமகளோ? என்று அவன் சந்தேகங்கொண்டான்; பின்பு கால் நிலந்தோய்தலாலும், கண்ணிமைத்தலாலும் அவள் ஒரு மானிட மடந்தையே என்று தேறினான்; ஆயினும் அவளுடைய மாலையும் சாந்தமும் அப்ராக்ருதமான திவ்ய

கந்தத்தைத் தருதலால், அவளை இன்னவளென்று துணியமாட்டாது மயங்கினன். இவ்வாறு அவளைக் குறித்து ஒருகால் ஐயுறுவதும், ஒருகால் தெளிவடைவதும், மீண்டும் ஒருகால் ஐயுறுவதுமாக அவன் மனம் ஒருநிலைப்படாது ஊசலாடிற்று.

ஆகையால் அவன் அவளருகிற் சென்று, 'ஓ மெல்லியல் நல்லாய்! நீ யார்? நின் திருப்பெயர் யாது? நினது குலமும் கோத்திரமும் யாவை? நினக்கு உறைவிடம் யாது? துணையாவார் ஒருவருமின்றித் துயருழந்துநிற்கும் நீ இப் புல்லிய தரையிடைப் பொருந்தியிருத்தற்குக் காரணம் என்னை? இவற்றை எனக்குச் சொல்லுவாயாக' என்று இனிமையாய்க் கூறினன்.

அங்ஙனம் அவ் வேந்தர்பெருமானால் வினவப்பட்டவுடனே ஊர்வசியின் உள்ளம் களிகூர்ந்தது; அவள்உடல் புளகங்கொண்டது. அதனால் அன்பே உருவாயினாற்போன்ற அவள், மிகவும் இன்பமான வார்த்தைகளை இயம்பலானாள். 'முன்பொருநாள் பொன்னுலகத்தில் புரந்தரன் கொலுவீற்றிருக்கையில் யான் அங்குச் சென்றேன். அப்பொழுது மிகுதியும் வனப்புவாய்ந்திருந்த என்னை அமரர்கோன் தன் ஆயிரங்கண்களாலும் நோக்கி, 'சேயிழாய்! நினக்கு யாவர்மீது வேட்கையுளது? செப்புவாயாக;' என்று பணித்தான். அதுகேட்டுச் சிற்றறிவினளாகிய யான் தேவர்களையிகழ்ந்து, புருஷர்களுக்குள் உத்தமனான புரூரவனைக் காதலிப்பதாக உரைத்தேன். உடனே அவன் வெகுண்டு என்னைச் சபித்தனன். அதனால் யான் இம் மண்ணுலகில் ஏங்கி வருந்துகின்றேன். என் பெயர் ஊர்வசியென்று சொல்லுவர். அது நிற்க; என் மனதைக் கவர்ந்த ஓ மன்னர் மன்ன! கண்ணினுக்கினிய காட்சிக் காளையாகிய நீவிர் யார் என்பதை எனக்கு அறிவிக்க வேண்டுகிறேன்:' என்று அவள் மிகுந்த வினயமாக மொழிந்தனள்.

அதனைச் செவியேற்றிருந்த புரூரவன் அவளை நோக்கி, 'தையால்! யான் சந்திரன் பேரன்; புந்தியின் புதல்வன். என் பெயர் புரூரவன் என்பது. யான் உன்னை மிகவும் காதலிக்கின்றேன். ஆதலால் நீ எனது உயிர்த்துணைவியாகவேண்டும். அன்றியும் இப்பொழுதே நாமிருவரும் இப் பூஞ்சோலையிற் கூடி இன்புறுவதற்கு நீ இணங்குவாயாக:' என்று சொல்லி ஓர் ஏகாந்தமான இடத்தில் அவளுடன் மணந்து மகிழ்ந்தனன்.